**பெருநகர குற்றவியல் நடுவர், 4 வது விரைவு நீதிமன்றம், ஜார்ஜ் டவுன், சென்னை-01**

முன்னிலை.திரு.ஜி.சிவகுமார், பி.எஸ்சி., பி.எல்.,

CC.No.2868/2019

**புகார்தாரர் தரப்பு 1 வது சாட்சி**

பெயர் - மோகன் குமார் நாள்.21.07.2023

//1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டம் (மையச்சட்டம் 44/1969)இன் வகைமுறைகளுக்கு உட்பட்டு உளமார உறுதியளிக்கப்படுகிறது// சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

**எதிரி ஆஜர். அவரது வழக்கறிஞர் ஆஜரானர்.**

**கூடுதல் முதல் விசாரணை (சத்தியபிரமாணத்தின் பெயரில்)**

1. புகார்தாரருடைய கணக்கு பட்டியல்கள் கரூர் வைசியா வங்கி மற்றும் ஆசிஸ் வங்கி கணக்கு பட்டியலை 01.01.2016 முதல் 31.03.2020 வரை உள்ள காலத்திற்கு நான் தாக்கல் செய்கிறேன். ஏற்கெனவே கடன் வாங்கிய அவற்றை கொடுத்து விட்டதாக ஆஜர் எதிரி சொல்வதால் மேற்படி ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். எதிரி ஏற்கெனவே கொடுத்துவிட்டதாக சொல்லும் கடன்கள் வேறு, தற்சமயம் கொடுக்க வேண்டிய கடன்கள் வேறு.

2. (**01.01.2016 முதல் 31.03.2020 வரை உள்ள காலத்திற்கு புகார்தாரரின் கணக்கு பட்டியல் புசாஆ-09 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). (சாட்சிக்கு கொடுத்த பவர் பத்திரமே செல்லதக்கது அல்ல என்றும் அதனால் அவருக்கு சாட்சியம் அளிக்க அதிகாரம் இல்லை என்றும் கூறி எதிரி தரப்பில் ஆட்சபனை செய்யப்படுகிறது. ஆட்சபனை குறித்து வழக்கு முடிவில் தீர்மானிக்கப்படும்).

**(குறுக்கு விசாரணை தொடர்ச்சி எதிரி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கிணங்க வேறொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது).**